அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 20/2017

எனது இல: EST -06/04/LOANS/4072

அரசாங்க நிர்வாக மற்றும்

முகாமைத்துவ அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2017.08.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 11 பிரிவில் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்குதல்

தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 11 பிரிவு தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அப் பிரிவின் 11:8:8 ஆம் உப பிரிவுக்கு பின்வரும் புதிய உப பிரிவுகளை உள்ளடக்கியதாக திருத்தியமைப்பதென 2017.07.18 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

11:8:8:1 குறித்த ஆதனக் கடன் மீதியானது உரிய வங்கியில் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர், அது பற்றி அலுவலர் இறுதியாக சேவையாற்றிய நிறுவனத்தின் நிறுவனத் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11:8:8:2 மருத்துவக் காரணங்களினால் ஓய்வு பெற்று, கடன் உத்தரவாத நிதியம் மூலம் ஆதனக் கடன் மீதி செலுத்தித் தீர்க்கப்பட்ட அலுவலரொருவர் மீள சேவையில் அமர்த்தப்படும் பட்சத்தில், மீள

சேவையில் அமர்த்தப்பட்ட திகதியில் இருந்து, கடன் மீதி தீர்க்கப்படாதிருப்பின், அலுவலர் வங்கிக்கு செலுத்த வேண்டிய மதாந்த தவணை மற்றும் அலுவலரிடம் இருந்து அறவிட வேண்டிய மாதாந்த வட்டி என்பன சேவையில் இல்லாதிருந்த காலத்திற்குரிய தவணை மற்றும் வட்டயை விட்டுவிட்டு மீள சேவையில் அமர்த்தப்பட்ட தினத்தில் இருந்து அவருக்கு செலுத்தப்படும் ஊதியத்தில் இருந்து மாதாந்தம் அறவிட்டு அரசாங்க நானாவித வருமதியில் வரவிலிடுவதற்கு ஊதியம் செலுத்துகின்ற நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

03. இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2017.07.18 ஆந் திகதியில் இருந்து வலுவிலிருக்கும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு